செய்தி வெளியீட்டு எண்–365 நாள்–1.5.2010

**ஒரகடம் சிப்காட் வளாகத்தில் நிறுவப்பட்டுள்ள அமெரிக்க நிறுவனமான சான்மினா – எஸ்.சி.ஐ. நிறுவனத்தில் பணிபுரிய 19 உள்ளூர் இளைஞர்களுக்கு மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் பணி நியமன ஆணைகளை வழங்கினார்**

* * * * * *

மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (1.5.2010) தலைமைச் செயலகத்தில், அமெரிக்க நிறுவனமான சான்மினா–எஸ்.சி.ஐ நிறுவனத்தில் பணிபுரிய 19 உள்ளூர் இளைஞர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

சான்மினா எஸ்.சி.ஐ. டெக்னாலஜி இந்தியா பி.லிட். என்ற நிறுவனம், சிப்காட் தொழில் வளர்ச்சி மையத்தில் உள்ள உயர் தொழில் நுட்ப மின்னணு சிறப்பு பொருளாதார மண்டலத்தில் ரூ.225 கோடி முதலீட்டில் தகவல் தொடர்பு, மருத்துவம், தானியங்கி, பல்நோக்கு ஊடகம், நுகர்வோர் மின்னணு சாதனங்கள் மற்றும் பாதுகாப்பு சாதனங்களுக்காக உயர் தொழில் நுட்ப மின்னணு கருவிகள் தயாரிப்பதற்கான தொழிற்சாலையை நிறுவியுள்ளது.

இந்த தொழிற்சாலையை மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் 28.3.2010 அன்று தொடங்கி வைத்து பேசும் போது, இத்தொழிற்சாலைக்கு நிலம் வழங்கிய குடும்பத்தினருக்கும் மற்றும் உள்ளூர் இளைஞர்களுக்கும் வேலை வாய்ப்பில் முன்னுரிமை அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

அதற்கிணங்க, இந்நிறுவனம் ஒரு புதிய முயற்சியாக, ஒரகடம் பகுதியில் உள்ள வல்லக்கோட்டை, வல்லம், வடகால், வைப்பூர், மாத்தூர் மற்றும் சென்னாக்குப்பம் கிராமங்களிலுள்ள உயர்நிலைப்பள்ளிகளில் பன்னிரெண்டாம் வகுப்பு படித்த 10 மாணவிகளையும் மற்றும் 9 மாணவர்களையும் அவர்கள் படித்த பள்ளி வளாகங்களிலேயே நேர்முகத் தேர்வு மூலம் தேர்ந்தெடுத்துள்ளனர். இந்த 19 பேரும் தங்களது மேற்படிப்பை தொடரமுடியாத ஏழ்மை நிலையில் உள்ளவர்கள். இவர்கள் அனைவருக்கும் சான்மினா நிறுவனத்தில் இளநிலை இயக்குபவர் (Junior Operator) ஆக பணிபுரிய, மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் இன்று பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

இந்த 19 பேரும், மேலும் உயர்கல்வி படிக்க விரும்பினால், அதற்கான கால அவகாசமும் மற்றும் படிப்பிற்குத் தேவையான அனைத்து நிதி உதவிகளும் சான்மினா நிறுவனம் செய்து தர முன்வந்துள்ளது.

இந்நிகழ்வின் போது, நாடாளுமன்ற உறுப்பினர் திரு. ஏ.கே.எஸ்.விஜயன், தொழில்துறை முதன்மைச் செயலாளர் திரு ராஜிவ் ரஞ்சன், சிப்காட் நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் டாக்டர் என்.கோவிந்தன் மற்றும் சான்மினா எஸ்.சி.ஐ. நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் திரு குமார் சுப்ரமணியம், இயக்குநர் திரு. ஆர்.எஸ். வெங்கட்ராமன் ஆகியோர் உடனிருந்தனர்.

----------

வெளியீடு–இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை,
தலைமைச் செயலகம், சென்னை–9.